# NSW மீள்-திறப்பு

NSW GOVERNMENT

| | 80 சதவீதத்தினை எட்டும்பொழுது கூடுதலான மீள்-திறப்பு துவக்கம் | 8 நவம்பர் 2021 | 95 சதவீதம் அல்லது 15 டிசம்பர் |
|---|---|---|---|
| | தடுப்பூசிகளை **முழுமையாக இட்டுக்கொண்டவர்களால்** மட்டுமே செய்ய இயலுமான காரியங்களாவன | தடுப்பூசிகளை **முழுமையாக இட்டுக்கொண்டவர்களால்** மட்டுமே செய்ய இயலுமான காரியங்களாவன | **அனைவராலும்** செய்ய இயலுமான காரியங்களாவன |
| | பெரும்பாலான சூழல்களில் 'கோவிட்-பாதுகாப்பு' உள்ள விதத்தில் வருகையைப் பதிவு செய்யவேண்டிய மற்றும் தடுப்பூசி இட்டுக்கொண்டதற்கான சான்றைக் காண்பிக்க வேண்டிய அவசியம் ஊழியர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இருக்கும் • NSW மாநிலப் பிராந்தியப் பகுதிச் சூழல்களில் ஊழியர்களும், வாடிக்கையாளர்களும் குறைந்தபட்சமாக 'கோவிட்-19' தடுப்பூசி மருந்தின் ஒரு அளவையாவது இட்டுக்கொண்டிருந்தால், அவர்கள் 11 அக்டோபர் அன்று தடுப்பூசித் தேவைப்பாடுகளுடன் வேலைக்குத் திரும்பியிருப்பர்கள், ஆனால் 1 நவம்பர் 2021-இற்குள்ளாக அவர்கள் தடுப்பூசிகளை முழுமையாகக் கட்டாயம் இட்டுக்கொண்டிருக்கவேண்டும் • கீழே பட்டியல் இடப்பட்டுள்ள நடவடிக்கைகளில் சிலவற்றிற்கு, உட்புறப் பகுதிகளில் 4 சதுர மீட்டருக்கு ஒரு ஆள், மற்றும் வெளிப்புறப் பகுதிளில் 2 சதுர மீட்டருக்கு ஒரு ஆள் என்ற 'ஆள்-அடர்த்தி' கட்டுப்பாடுகள் இருக்கும் • 'கோவிட்-19 பாதுகாப்புத் திட்டங்கள்' இருக்கும் | பெரும்பாலான சூழல்களில் 'கோவிட்-பாதுகாப்பு' உள்ள விதத்தில் வருகையைப் பதிவு செய்யவேண்டிய மற்றும் தடுப்பூசி இட்டுக்கொண்டதற்கான சான்றைக் காண்பிக்க வேண்டிய அவசியம் ஊழியர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இருக்கும் • கீழே பட்டியல் இடப்பட்டுள்ள நடவடிக்கைகளில் சிலவற்றிற்கு, உட்புறப் பகுதிகளில் 4 சதுர மீட்டருக்கு ஒரு ஆள், மற்றும் வெளிப்புறப் பகுதிளில் 2 சதுர மீட்டருக்கு ஒரு ஆள் என்ற 'ஆள்-அடர்த்தி' கட்டுப்பாடுகள் இருக்கும் • 'கோவிட்-19 பாதுகாப்புத் திட்டங்கள்' இருக்கும் | கீழே பட்டியல் இடப்பட்டுள்ள நடவடிக்கைகள் அனைத்திற்கும் உட்புற மற்றும் வெளிப்புறப் பகுதிளில் 2 சதுர மீட்டருக்கு 1 ஆள் என்ற 'ஆள்-அடர்த்தி' கட்டுப்பாடுகள் இருக்கும் |
| **முகக் கவசங்கள் மற்றும் 'QR' குறிமீடுகள்** | > பொதுப் போக்குவரத்து சாதனங்கள், விமானங்கள் மற்றும் விமான நிலையங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய அனைத்து உட்புற சூழல்களிலும் அனைத்துப் பணியாளர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் (12 வயதிற்குக் கீழ்ப்பட்ட குழந்தைகள் நீங்கலாக) முகக் கவசங்கள் தேவைப்படும்<br>> அலுவலக் கட்டிடங்களில் முகக் கவசங்கள் இனி தேவைப்படாது (முழுமையாகத் தடுப்பூசிகளை இட்டுக்கொள்ளாதவர்கள் நீங்கலாக)<br>> வெளிப்புறச் சூழல்களில் முகக் கவசங்கள் இனி தேவைப்படாது (கட்டிடங்களின் முன் பகுதிகளில் உள்ள உபசரிப்பு ஊழியர்கள் நீங்கலாக)<br>> "கோவிட்-19 பாதுகாப்பு" குறித்து அவர்களுடைய வருகையைப் பதிவுசெய்ய வேண்டிய தேவையும், தடுப்பூசி இட்டுக்கொண்டதற்கான சான்றிற்கான தேவையும் ஊழியர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் இருக்கும் | > பொதுப் போக்குவரத்து சாதனங்கள், விமானங்கள் மற்றும் விமான நிலையங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய அனைத்து உட்புற சூழல்களிலும் அனைத்துப் ஊழியர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் (12 வயதிற்குக் கீழ்ப்பட்ட குழந்தைகள் நீங்கலாக) முகக் கவசங்கள் தேவைப்படும்<br>> அலுவலக் கட்டிடங்களில் முகக் கவசங்கள் தேவைப்படாது (முழுமையாகத் தடுப்பூசிகளை இட்டுக்கொள்ளாதவர்கள் நீங்கலாக)<br>> வெளிப்புறச் சூழல்களில் முகக் கவசங்கள் தேவைப்படாது (கட்டிடங்களின் முன் பகுதிகளில் உள்ள உபசரிப்பு ஊழியர்கள் நீங்கலாக)<br>> 'கோவிட்-19 பாதுகாப்பு' குறித்து அவர்களுடைய வருகையைப் பதிவுசெய்ய வேண்டிய தேவையும், தடுப்பூசி இட்டுக்கொண்டதற்கான சான்றிற்கான தேவையும் ஊழியர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் இருக்கும் | > பொதுப் போக்குவரத்துகள், விமானங்கள் மற்றும் விமான நிலையங்கள் ஆகிய இடங்களிலும், உட்புறப் பகுதிகளிலும், கட்டிடங்களுக்கு முன் பகுதிகளிலும் இருக்கும் உபசரிப்பு ஊழியர்களுக்கு மட்டும் முகக் கவசங்கள் தேவைப்படும்<br>> வெளிப்புறப் பகுதிச் சூழல்களில் முகக் கவசங்கள் இனி தேவைப்படாது (கட்டிடங்களுக்கு முன் பகுதிகளில் இருக்கும் உபசரிப்பு ஊழியர்கள் உள்ளடங்க)<br>> 'பொது சுகாதார உத்தரவு' தடுப்பூசி இட்டுக்கொண்டதற்கான சான்றினை இனி வேண்டாது |
| **குடும்பத்தினரையும் நண்பர்களையும் தரிசித்தல்** | > எந்த ஒரு சமயத்திலும் 20 நபர்கள் வரைக்குமான வருகையாளர்கள் உங்களுடைய வீட்டிற்குள் அனுமதிக்கப்படுவார்கள் (12 வயதிற்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கு வருகையாளர் எண்ணிக்கைக் கட்டுப்பாடுகள் இருக்காது)<br>> 50 நபர்கள் வரைக்கும் சிறு வெளிப்புற ஒன்றுகூடல்களும், பொழுதுபோக்கு நட்வடிக்கைகளும் அனுமதிக்கப்படும் (முழுமையாகத் தடுப்பூசிகளை இட்டுக்கொள்ளாதவர்களுக்கு 2 -பேர் வரை என்ற கட்டுப்பாடு இருக்கும்)<br>> முதியோர் பராமரிப்பு இல்லங்கள் மற்றும் இயலாமையுடையோர் இல்லங்கள் ஆகியவற்றில் வருகையாளர்களும், தங்குநர்களும் அந்த இல்ல வசதிகளின் விதிமுறைகளுக்கு ஏற்ப அனுமதிக்கப்படுவர் | > உங்கள் வீட்டிற்குள் வரும் வருகையாளர்களின் எண்ணிக்கையில் கட்டுப்பாடு இல்லை<br>> வெளிப்புற ஒன்றுகூடல்களுக்கும், பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கும் எண்ணிக்கைக் கட்டுப்பாடு இல்லை. (1000 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையினர் வருவதாயின் 'கோவிட்-19 பாதுகாப்பு திட்டங்கள்' அவசியமாகும்)<br>> முதியோர் பராமரிப்பு இல்லங்கள் மற்றும் இயலாமையுடையோர் இல்லங்கள் ஆகியவற்றிற்கு வரும் சகல வருகையாளர்கள் அந்த இல்ல வசதிகளின் விதிமுறைகளுக்கு ஏற்ப அனுமதிக்கப்படுவர் | > உங்களுடைய வீட்டிற்கு வருபவர்களின் எண்ணிக்கை குறித்த கட்டுப்பாடு எதுவும் இருக்காது<br>> வெளிப்புற ஒன்றுகூடல்களில் எத்தனை பேர் கலந்துகொள்ளலாம் என்ற கட்டுப்பாடு எதுவும் இருக்காது (1000 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையினர் வருவதாயின் 'கோவிட்-19 பாதுகாப்பு திட்டங்கள்' அவசியமாகும்)<br>> முதியோர் பராமரிப்பு இல்லங்கள் மற்றும் இயலாமையுடையோர் இல்லங்கள் ஆகியவற்றில் வருகையாளர்கள் மற்றும் தங்குநர்கள் அனைவரும் அந்த இல்ல வசதிகளின் விதிமுறைகளுக்கு ஏற்ப அனுமதிக்கப்படுவர் |
| **உடற்பயிற்சி மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள்** | > உடற்பயிற்சிக் கூடங்கள், உட்புறப் பொழுதுபோக்கு வசதிகள், விளையாட்டு வசதிகள் ஆகியன வகுப்பில் 20 நபர்கள் வரை என்ற ஆள்-அடர்த்திக் கட்டுப்பாட்டு முறையில் மீண்டும் திறக்கும்<br>> நீச்சல் பாடங்கள், பயிற்சிகள் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் ஆகியவற்றிற்காக உட்புற நீச்சல் குளங்கள் திறக்கும்<br>> முழுமையாகத் தடுப்பூசிகளை இட்டுக்கொண்டுள்ள 1000 வரையிலான ஊழியர்கள், பார்வையாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் 'கோவிட்-19 பாதுகாப்பு திட்டத்துடன்' சமூக விளையாட்டுகளில் அனுமதிக்கப்படுவர் | > உடற்பயிற்சிக் கூடங்களும் நடன வகுப்புகளும் 20 நபர்களுக்குள் மட்டுப்படுத்தப்படும்<br>> சகல நோக்கங்களுக்கும் உட்புற நீச்சல் குளங்கள் மீண்டும் திறக்கும்<br>> சகல பணியாளர்கள், பார்வையாளர்கள் மற்றும் பங்குபற்றுநர்கள் ஆகியோருக்காக சமூக விளையாட்டுகள் அனுமதிக்கப்படும் (1000 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையினர் வருவதாயின் 'கோவிட்-19 பாதுகாப்பு திட்டங்கள்' அவசியமாகும்) | > உடற்பயிற்சிக் கூடங்கள், உட்புறப் பொழுதுபோக்கு வசதிகள், விளையாட்டு வசதிகள் ஆகியவற்றில் ஆட்களின் எண்ணிக்கை மீதான கடுப்பாடுகள் இருக்காது, 'ஆள்-அடர்த்தி' கட்டுப்பாடுகள் இருக்கும்<br>> அனைத்து நோக்கங்களுக்காகவும் உட்புற நீச்சல் குளங்கள் திறந்திருக்கும்<br>> சகல பணியாளர்கள், பார்வையாளர்கள் மற்றும் பங்குபற்றுநர்கள் ஆகியோருக்காக சமூக விளையாட்டுகள் அனுமதிக்கப்படும் (1000 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையினர் வருவதாயின் 'கோவிட்-19 பாதுகாப்பு திட்டங்கள்' அவசியமாகும்) |

16 வயதிற்குக் கீழ்ப்பட்ட, முற்றிலுமாகத் தடுப்பூசிகளை இட்டுக்கொள்ளாதவர்கள் அவர்களுடன் யாரும் வராமல் - தனியாக அவர்களுடைய வேலைத்தலங்களிலும், அனைத்து வெளிப்புற சூழல்களிலும் அனுமதிக்கப்படுவர், ஆனால், உணவு-உபசாரத் தலங்களிலும் (எடுப்புச் சாப்பாடுகளை வாங்கச் செல்லும்போது தவிர), பொழுதுபோக்கு வசதிகளிலும், பிரதானமான கேளிக்கை இடவசதிகளிலும், அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த தடுப்பூசிகளை முற்றிலுமாக இடுக்கொண்டுள்ள அங்கத்தவர் ஒருவர் அவர்களுடன் கட்டாயமாகக் கூட இருக்கவேண்டும். **'பொது சுகாதார உத்தரவுக'ளுக்கு ஏற்ப, உள்ளூராட்சிப் பகுதிகள் வெவ்வேறு விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டவையாக இருக்கலாம்.**



மிகச் சமீபத்தியத் தகவல்களுக்கு **nsw.gov.au** எனும் வலைத்தலத்திற்குச் செல்லுங்கள்

# NSW மீள்-திறப்பு

NSW GOVERNMENT

| | 80 சதவீதத்தினை எட்டும்பொழுது கூடுதலான மீள்-திறப்பு துவக்கம் | 8 நவம்பர் 2021 | 95 சதவீதம் அல்லது 15 டிசம்பர் |
|---|---|---|---|
| | தடுப்பூசிகளை **முழுமையாக இட்டுக்கொண்டவர்களால்** மட்டுமே செய்ய இயலுமான காரியங்களாவன | தடுப்பூசிகளை **முழுமையாக இட்டுக்கொண்டவர்களால்** மட்டுமே செய்ய இயலுமான காரியங்களாவன | **அனைவராலும்** செய்ய இயலுமான காரியங்களாவன |
| **பாடசாலைகள்** | > '3-ஆம் நிலை' அல்லது '3-ஆம் நிலை பிளஸ்' கோவிட்-19 பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் அக்டோபர் 25 ஆம் திகதி பாடசாலைகள் மீண்டும் திறக்கும் (education.nsw.gov.au எனும் வலைத்தலத்திற்குச் செல்லுங்கள்) | > மாணவ-மாணவியர்கள் ஏற்கனவே நேருக்கு நேர் கற்றல் முறைக்குத் திரும்பிவிட்டனர் | > மாணவ-மாணவியர்கள் ஏற்கனவே நேருக்கு நேர் கற்றல் முறைக்குத் திரும்பிவிட்டனர் |
| **கடைகளில் பொருட்கள் வாங்குதல் மற்றும் தனி-நபர் சேவைகளைப் பெறுதல்** | > ஆள்-அடர்த்திக் கட்டுப்பாடுகளுடன் அத்தியாவசியம் இல்லாத சில்லறை வியாபாரங்கள் மீண்டும் திறக்கும் (தடுப்பூசிகளை முழுமையாக இட்டுக்கொள்ளாதவர்களால் அத்தியாவசியம் இல்லாத சில்லறைப் பொருட்களை இணையம் மூலமாக உத்தரவிட்டுப் பெற்றுக்கொள்ள மட்டுமே இயலும்)<br>> (சிகை அலங்கார நிலையங்கள், 'ஸ்பா'-க்கள், அழகு மற்றும் நக அலங்கார நிலையங்கள், பச்சை-குத்து நிலையங்கள், உடல்-பிடிப்பு நிலையங்கள் ஆகியன உள்ளடங்க) வாடிக்கையாளர் எண்ணிக்கை வரையறையின்றி ஆனால் ஆள்-அடர்த்திக் கட்டுப்பாடுகளுடன் மீண்டும் திறக்கும்<br>> பாலியல் சேவைத் தலங்கள் திறக்கும் | > அத்தியாவசியம் இல்லா சில்லறை வியாபாரங்கள் அனைவருக்காகவும் திறந்தே இருக்கும், ஆள்-அடர்த்திக் கட்டுப்பாடுகள் இருக்கும் (தடுப்பூசிகளை முழுமையாக இட்டுக்கொள்ளாதவர்களால் அத்தியாவசியம் இல்லாத சில்லறைப் பொருட்களை இணையம் மூலமாக உத்தரவிட்டுப் பெற்றுக்கொள்ள மட்டுமே இயலும்)<br>> (சிகை அலங்கார நிலையங்கள், 'ஸ்பா'-க்கள், அழகு மற்றும் நக அலங்கார நிலையங்கள், பச்சை-குத்து நிலையங்கள், மசாஜ் நிலையங்கள் ஆகியன உள்ளடங்க) தனி-நபர் சேவைகளுக்கு ஆள் எண்ணிக்கைக் கட்டுப்பாடு எதுவும் இல்லாமல், ஆள்-அடர்த்திக் கட்டுப்பாடுகளுடன், தனிப்பட்ட சேவைகள் திறக்கும்<br>> பாலியல் சேவைத் தலங்கள் திறக்கும் | > அத்தியாவசியம் இல்லா சில்லறை வியாபாரங்கள் அனைவருக்காகவும் திறந்திருக்கும், ஆள்-அடர்த்திக் கட்டுப்பாடுகள் இருக்கும்<br>> தனிப்பட்ட சேவைகளுக்கு ஆள் எண்ணிக்கைக் கட்டுப்பாடு எதுவும் இல்லாமல், ஆள்-அடர்த்திக் கட்டுப்பாடுகளுடன், தனிப்பட்ட சேவைகள் (சிகை அலங்கார நிலையங்கள், 'ஸ்பா'-க்கள், அழகு மற்றும் நக அலங்கார நிலையங்கள், பச்சை-குத்து நிலையங்கள், மசாஜ் நிலையங்கள் ஆகியன உள்ளடங்க) மீண்டும் திறக்கும்<br>> பாலியல் சேவைத் தலங்கள் திறக்கும் |
| **உணவகங்கள் மற்றும் விருந்தோம்பல்** | > 20 நபர்கள் வரை என்ற ஆள்-அடர்த்திக் கட்டுப்பாட்டுகளுடன் விருந்தோம்பல் துறைத் தலங்கள் மீண்டும் திறக்கும் (தடுப்பூசிகளை முழுமையாக இட்டுக்கொள்ளாதவர்களுக்கு எடுப்பு சாப்பாடு மட்டுமே கிடைக்கும்)<br>> உட்புறப் பகுதிகளில் பாடுதல் எதுவும் கூடாது (பாடகர்களுக்கு விலக்கு இருக்கும்)<br>> உட்புற மற்றும் வெளிப்புறப் பகுதிகளில் நடனம் அனுமதிக்கப்படும்<br>> உட்புற மற்றும் வெளிப்புறப் பகுதிகளில் அமர்ந்துகொண்டோ அல்லது நின்றுகொண்டோ அருந்தலாம் | > முன்பதிவு அல்லது ஆள் கட்டுப்படுகள் விருந்தோம்பல் துறையில் இருக்காது, ஆள் அடர்த்திக் கட்டுப்பாட்டுகள் இருக்கும்<br>> தடுப்பூசிகளை முழுமையாக இட்டுக்கொள்ளாதவர்களுக்கு எடுப்பு சாப்பாடு மட்டுமே கிடைக்கும்<br>> உட்புற மற்றும் வெளிப்புறப் பகுதிகளில் பாடல் மற்றும் நடனம் அனுமதிக்கப்படும்<br>> உட்புற மற்றும் வெளிப்புறப் பகுதிகளில் அமர்ந்துகொண்டோ அல்லது நின்றுகொண்டோ அருந்தலாம் | > விருந்தோம்பல் தலங்களில் ஆள் எண்ணிக்கை குறித்த கட்டுப்பாடு எதுவும் இருக்காது, ஆள்-அடர்த்திக் கட்டுப்பாடுகள் இருக்கும்<br>> பாடல் மற்றும் ஆடல் உட்புறப் பகுதிகளிலும், வெளிப்புறப் பகுதிகளிலும் அனைவருக்கும் அனுமதிக்கப்படும்<br>> உட்புற மற்றும் வெளிப்புறப் பகுதிகளில் அருந்து கொண்டோ அல்லது நின்றுகொண்டோ அருந்தலாம் |
| **வீட்டிலிருந்து வேலை செய்தல்** | > நியாயமான முறையில் நடைமுறைக்கு ஏற்றதாக இருந்தால், முதலாளிகள் அவர்களது ஊழியர்களை வீட்டிலிருந்து வேலை செய்ய அனுமதிப்பர்<br>> நியாயமான முறையில் நடைமுறைக்கு ஏற்றதாக இருந்தால், தடுப்பூசிகளை முழுமையாக இட்டுக்கொள்ளாத ஊழியர்களை வீட்டிலிருந்து வேலை செய்யுமாறு அவர்களுடைய முதலாளிகள் வேண்டுவர் | > நியாயமான முறையில் நடைமுறைக்கு ஏற்றதாக இருந்தால், முதலாளிகள் அவர்களது ஊழியர்களை வீட்டிலிருந்து வேலை செய்ய அனுமதிப்பர்<br>> நியாயமான முறையில் நடைமுறைக்கு ஏற்றதாக இருந்தால், தடுப்பூசிகளை முழுமையாக இட்டுக்கொள்ளாத ஊழியர்களை வீட்டிலிருந்து வேலை செய்யுமாறு அவர்களுடைய முதலாளிகள் வேண்டுவர் | > ஊழியர்கள் வீட்டிலிருந்து வேலை செய்ய அவர்களுடைய முதலாளிகள் அவர்களது விருப்பத்தின் பிரகாரம் அனுமதிப்பர் |
| **பயணம் மற்றும் போக்குவரத்து** | > பிரயாணத்திற்கான தூரக் கட்டுப்பாடுகள் இருக்காது<br>> சிட்னி மாநகரிற்கும் NSW மாநில பிராந்தியப் பகுதிகளுக்கும் இடையேயான பகல்-வேலைப் பயணங்கள் உள்ளடங்க, விடுமுறைப் பயணங்கள் அனுமதிக்கப்படாது<br>> ஒரு வாகனத்தில் பலர் கூட்டாகச் சேர்ந்து பயணிப்பது அனுமதிக்கப்படும் (தடுப்பூசிகளை முழுமையாக இட்டுக்கொள்ளாதவர்களாக இருந்தால், அத்தகையோர் உங்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக மட்டுமே இருக்கவேண்டும்)<br>> 'கேரவான்' பூங்காக்கள் மற்றும் முகாம் இட்டுத் தங்கும் இடங்கள் ஆகியன திறந்திருக்கும் (தடுப்பூசிகளை முழுமையாக இட்டுக்கொள்ளாதவர்களுக்காவும் உள்ளடங்க) | > பிரயாணத்திற்கான தூரக் கட்டுப்பாடுகள் இருக்காது<br>> சிட்னி மாநகரிற்கும் NSW மாநில பிராந்தியப் பகுதிகளுக்கும் இடையேயான பகல்-வேலைப் பயணங்கள் உள்ளடங்க, விடுமுறைப் பயணங்கள் அனுமதிக்கப்படும் (தடுப்பூசிகளை முழுமையாக இட்டுக்கொள்ளாதவர்கள் நீங்கலாக)<br>> ஒரு வாகனத்தில் பலர் கூட்டாகச் சேர்ந்து பயணிப்பது அனுமதிக்கப்படும் (தடுப்பூசிகளை முழுமையாக இட்டுக்கொள்ளாதவர்களாக இருந்தால், அத்தகையோர் உங்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக மட்டுமே இருக்கவேண்டும்)<br>> 'கேரவான்' பூங்காக்கள் மற்றும் முகாம் இட்டுத் தங்கும் இடங்கள் ஆகியன திறந்திருக்கும் (தடுப்பூசிகளை முழுமையாக இட்டுக்கொள்ளாதவர்களுக்காவும் உள்ளடங்க) | > சிட்னி மாநகரிற்கும் NSW மாநில பிராந்தியப் பகுதிகளுக்கும் இடையேயான பயணங்கள் அனைவருக்கும் அனுமதிக்கப்படுகிறது<br>> ஒரு வாகனத்தில் பலர் கூட்டாகச் சேர்ந்து பயணிப்பது அனைவருக்கும் அனுமதிக்கப்படுகிறது<br>> 'கேரவான்' பூங்காக்கள் மற்றும் முகாம் இட்டுத் தங்கும் இடங்கள் ஆகியன திறந்தே இருக்கும் (தடுப்பூசிகளை முழுமையாக இட்டுக்கொள்ளாதவர்களுக்காவும் உள்ளடங்க) |



மிகச் சமீபத்தியத் தகவல்களுக்கு **nsw.gov.au** எனும் வலைத்தலத்திற்குச் செல்லுங்கள்

# NSW மீள்-திறப்பு

NSW GOVERNMENT

| | 80 சதவீதத்தினை எட்டும்பொழுது கூடுதலான மீள்-திறப்பு துவக்கம் | 8 நவம்பர் 2021 | 95 சதவீதம் அல்லது 15 டிசம்பர் |
|---|---|---|---|
| | தடுப்பூசிகளை **முழுமையாக இட்டுக்கொண்டவர்களால்** மட்டுமே செய்ய இயலுமான காரியங்களாவன | தடுப்பூசிகளை **முழுமையாக இட்டுக்கொண்டவர்களால்** மட்டுமே செய்ய இயலுமான காரியங்களாவன | **அனைவராலும்** செய்ய இயலுமான காரியங்களாவன |
| **சர்வதேச பிரயாணம்** | > முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட சர்வதேச பயணிகள் நவம்பர் 1 முதல் இங்கு வந்தவுடன் தனிமைப்படுத்தப்பட வேண்டியதில்லை. அவர்கள் PCR பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும், சிகிச்சைப் பொருட்கள் நிர்வாகத்தால் (TGA) முழுமையாக தடுப்பூசி போடப்பட்டதாக அங்கீகரிக்கப்பட வேண்டும் மற்றும் அவர்களின் தடுப்பூசி நிலைக்கு ‘காமன்வெல்த்’ சான்றளிக்க வேண்டும்<br>> முழுமையாக தடுப்பூசி போடப்படாத சர்வதேச பயணிகள் நவம்பர் 1 முதல் 14 நாட்களுக்கு இங்கு வந்தவுடன் தனிமைப்படுத்தப்பட வேண்டும். உள்வருவோரின் எண்ணிக்கையில் கட்டுப்பாடு இருக்கும் | > முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட சர்வதேச பயணிகள் இனி வந்தவுடன் தனிமைப்படுத்தப்பட வேண்டியதில்லை. அவர்கள் PCR பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும், சிகிச்சைப் பொருட்கள் நிர்வாகத்தால் (TGA) முழுமையாக தடுப்பூசி போடப்பட்டதாக அங்கீகரிக்கப்பட வேண்டும் மற்றும் அவர்களின் தடுப்பூசி நிலைக்கு ‘காமன்வெல்த்’ சான்றளிக்க வேண்டும்<br>> முழுமையாக தடுப்பூசி போடப்படாத சர்வதேச பயணிகள் இன்னும் 14 நாட்களுக்கு இங்கு வந்தவுடன் தனிமைப்படுத்தப்பட வேண்டும். உள்வருவோரின் எண்ணிக்கையில் கட்டுப்பாடு இருக்கும் | > முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட சர்வதேச பயணிகள் இனி இங்கு வந்தவுடன் தனிமைப்படுத்தப்பட வேண்டியதில்லை. அவர்கள்  PCR பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும், சிகிச்சைப் பொருட்கள் நிர்வாகத்தால் (TGA) முழுமையாக தடுப்பூசி போடப்பட்டதாக அங்கீகரிக்கப்பட வேண்டும் மற்றும் அவர்களின் தடுப்பூசி நிலைக்கு ‘காமன்வெல்த்’ சான்றளிக்க வேண்டும்<br>> முழுமையாக தடுப்பூசி போடப்படாத சர்வதேச பயணிகள் இன்னும் 14 நாட்களுக்கு வந்தவுடன் தனிமைப்படுத்தப்பட வேண்டும். உள்வருவோரின் எண்ணிக்கையில் கட்டுப்பாடு இருக்கும் |
| **நிகழ்வுகளும் கேளிக்கைகளும்** | > பிரதான பொழுதுபோக்கு இடவசதிகள் ஆகியன (விளையாட்டு அரங்கங்கள், தனிக்-கருத்துப் பூங்காக்கள், குதிரைப் பந்தய மைதானங்கள் உள்ளடங்க) 5000 நபர்கள் வரை, ஆள்-அடர்த்திக் கட்டுப்பாடுகளுடன், அல்லது விதிவிலக்குடன் மீண்டும் திறக்கும்<br>> ஆள்-அடர்த்திக் கட்டுப்பாடுகளுடன், அல்லது நிலைப்படுத்தப்பட்ட இருக்கைகளில் 75 சதவீதம் வரைக்குமான இடங்கள் மட்டும் நிரம்பும் வகையிலும்  பொழுதுபோக்கு இடவசதிகள் (சினிமாக்கள் மற்றும் அரங்கங்கள் உள்ளடங்க) மீண்டும் திறக்கும்<br>> தகவலறிவு மற்றும் கல்வியறிவு இடவசதிகள் (கலைக் கூடங்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் நூலகங்கள் உள்ளடங்க) ஆகியன ஆள்-அடத்திக் கட்டுப்பாடுகளுடன் மீண்டும் திறக்கும்<br>> கோவிட்-19 பாதுகாப்புத் திட்டங்களுடன் 200 பேர்கள் வரைக்குமான வெளிப்புற ஒன்றுகூடல்கள் அனுமதிக்கப்படும்<br>> (வேலியிடப்பட்ட, அமர்ந்து மற்றும் டிக்கெட்டு வாங்கப்பட்ட) கட்டுப்படுத்தப்பட்ட வெளிப்புற பொதுக் கூட்டங்கள், ஆள்-அடர்த்திக் கட்டுப்பாட்டுடன் 3,000 பேர் வரை அனுமதிக்கப்படும்<br>> இரவுவிடுதிகளும், ‘ஆடை-அவிழ்புக்-கிளப்’களும் அமர்ந்த நிலையில் அருந்துவதற்காக திறக்கப்படும், ஆனால் நடனம் இருக்காது | > (விளையாட்டு அரங்கங்கள், கேளிக்கைப் பூங்காக்கள், குதிரைப் பந்தய மைதானங்கள் உள்ளடங்க) பிரதான பொழுதுபோக்கு இடவசதிகளில் ஆள் எண்ணிக்கைக் கட்டுப்பாடு இருக்காது. ஆனால் ஆள்-அடர்த்திக் கட்டுப்பாடுகள் அல்லது நிலைப்படுத்தப்பட்ட இருக்கைகளில் 100 சதவீதம் வரைக்குமான இடங்கள் மட்டும் நிரம்பும் வகையிலிருத்தல் போன்ற நிபந்தனைகள் இருக்கும்<br>> (சினிமாக்கள் மற்றும் அரங்கங்கள் உள்ளடங்க) பிரதான பொழுதுபோக்கு இடவசதிகளில் ஆள் எண்ணிக்கைக் கட்டுப்பாடு இருக்காது. ஆனால் ஆள்-அடர்த்திக் கட்டுப்பாடுகள் அல்லது நிலைப்படுத்தப்பட்ட இருக்கைகளில் 100 சதவீதம் வரைக்குமான இடங்கள் மட்டும் நிரம்பும் வகையிலிருத்தல் போன்ற நிபந்தனைகள் இருக்கும்<br>> (கலைக் கூடங்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் நூலகங்கள் உள்ளடங்க) தகவல் மற்றும் கல்வி நிலையங்களில் ஆள் எண்ணிக்கைக் கட்டுப்பாடு இருக்காது. ஆனால் ஆள்-அடர்த்திக் கட்டுப்பாடுகள் தொடர்ந்து இருக்கும்<br>> வெளிப்புறப் பொதுமக்கள்  ஒன்றுகூடல்கள் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்வுகளுக்கு ஆள் எண்ணிக்கைக் கட்டுப்பாடு இருக்காது (1000 -இற்கு மேற்பட்டவர்கள் சமூகமளிப்பதாயின் ‘கோவிட்-19 பாதுகாப்புத் திட்டங்கள்’ அவசியமாகும்)<br>> இரவுவிடுதிகளிலும், ‘ஆடை- அவிழ்புக்-கிளப்’புகளிலும் நடனம் அனுமதிக்கப்படும் மற்றும் மது அருந்துவதற்கு உட்கார்ந்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை<br>> பாலியல் சேவைத் தலங்கள் மீண்டும் திறக்கும், ஆள் அடர்த்திக் கட்டுப்பாடு இருக்கும்<br>> இசைக் கொண்டாட்டங்கள் தடைசெய்யப்பட்டிடுக்கும்<br>> பொழுதுபோக்கு மையங்களும், விளையாட்டு மையங்களும் மீண்டும் திறக்கப்படும், ஆள் அடர்த்திக் கட்டுப்பாடு இருக்கும் | > பிரதான பொழுதுபோக்கு இடவசதிகளுக்கு (விளையாட்டு அரங்கங்கள், கேளிக்கைப் பூங்காக்கள், குதிரைப் பந்தய மைதானங்கள் உள்ளடங்க) ஆள் எண்ணிக்கைக் கட்டுப்பாடு எதுவும் இருக்காது, ஆனால் ஆள்-அடர்த்திக் கட்டுப்பாடுகள் இருக்கும், அல்லது 100 சதவீத நிலைப்படுத்தப்பட்ட இருக்கைகள் நிரம்பலாம்<br>> பொழுதுபோக்கு இடவசதிகளுக்கு (சினிமாக்கள் மற்றும் அரங்கங்கள் உள்ளடங்க) ஆள்-அடர்த்திக் கட்டுப்பாடுகள் இருக்கும், ஆள் எண்ணிக்கைக் கட்டுப்பாடு எதுவும் இருக்காது, அல்லது 100 சதவீத நிலைப்படுத்தப்பட்ட இருக்கைகள் நிரம்பலாம்<br>> தகவல் மற்றும் கல்வி நிலையங்களுக்கு (கலைக் கூடங்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் நூலகங்கள் உள்ளடங்க) ஆள் எண்ணிக்கைக் கட்டுப்பாடு எதுவும் இருக்காது, ஆனால், ஆள்-அடத்திக் கட்டுப்பாடுகள் இருக்கும்<br>> வெளிப்புறப் பொதுமக்கள்  ஒன்றுகூடல்கள் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்வுகளுக்கு ஆள் எண்ணிக்கைக் கட்டுப்பாடு இருக்காது (1000 -இற்கு மேற்பட்டவர்கள் சமூகமளிப்பதாயின் ‘கோவிட்-19 பாதுகாப்புத் திட்டங்கள்’ அவசியமாகும்)<br>> இரவுவிடுதிகளும், ‘ஆடை- அவிழ்புக்-கிளப்’களும் பாலியல் சேவைத் தலங்களும் ஆள்-அடர்த்திக் கட்டுப்பாட்டுடன் மீண்டும்  திறக்கும்<br>> 20,000 பேர்கள் என்ற கட்டுப்பாடுடனும் ஆள்-அடர்த்திக் கட்டுப்பாட்டுடனும் இசைக் கொண்டாட்டங்கள் மீண்டும் துவங்கும்<br>> பொழுதுபோக்கு மையங்கள் மற்றும் விளையாட்டு மையங்களும் அனைவருக்கும் மீண்டும் திறக்கும் |
| **திருமணங்கள் மற்றும் சமய சேவைகள்** | > ஆள்-எண்ணிக்கைக் கட்டுப்பாடின்றி திருமணச் சடங்குகள் அனுமதிக்கப்படும் (தடுப்பூசிகளை முற்றிலுமாக இட்டுக்கொள்ளாதவர்களுக்கு 5- நபர் வரை என்ற கட்டுப்பாடு இருக்கும்)<br>> ஆள்-எண்ணிக்கைக் கட்டுப்பாடின்றி திருமண வரவேற்புகள் அனுமதிக்கப்படும் (தடுப்பூசிகளை முற்றிலுமாக இட்டுக்கொள்ளாதவர்களுக்கு அனுமதி இல்லை), உணவுட்கொள்ளல், அருந்துதல் ஆகியன நின்ற நிலையில் அனுமதிக்கப்படும், மற்றும் நடனமும் அனுமதிக்கப்படும், ஆனால் ஆள் அடர்த்திக் கட்டுப்பாடு இப்போதும் இருக்கும்<br>> ஆள்-எண்ணிக்கைக் கட்டுப்பாடின்றி இறுதிச்சடங்குகள் அனுமதிக்கப்படும் (தடுப்பூசிகளை முற்றிலுமாக இட்டுக்கொள்ளாதவர்களுக்கு 10 நபர்கள் வரை என்ற கட்டுப்பாடு இருக்கும்), உணவுட்கொள்ளல், அருந்துதல் ஆகியன நின்ற நிலையில் அனுமதிக்கப்படும், மற்றும் நடனமும் அனுமதிக்கப்படும், ஆனால் ஆள் அடர்த்திக் கட்டுப்பாடு இருக்கும்<br>> ஆள்-அடர்த்திக் கட்டுப்பாடுகளுடன் தடுப்பூசிகளை முற்றிலுமாக இட்டுக்கொள்ளாதவர்களுக்கு வழிபாட்டுத் தலங்கள் மீண்டும் திறக்கும்<br>> தடுப்பூசிகளை முழுமையாக இட்டுக்கொண்ட 10 வரைக்குமான பாடகர்கள் வழிபாட்டுத் தலங்களிலும், சமய வழிபாடுகளிலும் பாடலாம் | > ஆள் எண்ணிக்கைக் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லாமல் திருமணச் சடங்குகள் அனுமதிக்கப்படும் (தடுப்பூசிகளை முற்றிலுமாக இட்டுக்கொள்ளாதவர்களுக்கு 5- நபர்கள் வரை என்ற கட்டுப்பாடு இருக்கும்)<br>> ஆள் எண்ணிக்கைக் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லாமல் திருமண வரவேற்புகள் அனுமதிக்கப்படும் (தடுப்பூசிகளை முற்றிலுமாக இட்டுக்கொள்ளாதவர்களுக்கு அனுமதி இல்லை), நின்ற நிலையில் உணவுட்கொள்ளல், அருந்துதல் ஆகியன அனுமதிக்கப்படும் மற்றும் நடனம் அனுமதிக்கப்படும், ஆள்-அடர்த்திக் கட்டுப்பாடுகள் இப்போதும் இருக்கும்<br>> ஆள் எண்ணிக்கைக் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லாமல் இறுதிச் சடங்குகள் அனுமதிக்கப்படும் (தடுப்பூசிகளை முற்றிலுமாக இட்டுக்கொள்ளாதவர்களுக்கு 10 நபர்கள் வரை என்ற கட்டுப்பாடு இருக்கும்), மற்றும் நின்ற நிலையில் உணவுட்கொள்ளல், அருந்துதல் ஆகியன அனுமதிக்கப்படும் ஆள்-அடர்த்திக் கட்டுப்பாடுகள் இப்போதும் இருக்கும்<br>> தடுப்பூசிகளை முழுமையாக இட்டுக்கொள்ளாதவர்கள் உற்புறத்தில் பாடவோ நடனமாடவோ அனுமதியில்லை<br>> திருமண நிகழ்வுகளிலும் இறுதிச் சடங்குகளிலும் தடுப்பூசிகளை முற்றிலுமாக இட்டுக்கொள்ளாதவர்கள் அமர்ந்த நிலையிலேயே உண்பதும் அருந்துவதும் அவசியம்<br>> ஆள்-அடர்த்திக் கட்டுப்பாடுகளுடன் அனைவருக்கும் வழிபாட்டுத் தலங்கள் மீண்டும் திறக்கும் | > ஆள் எண்ணிக்கைக் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லாமல் திருமண நிகழ்ச்சிகள் அனுமதிக்கப்படும், நின்ற நிலையில் உணவுற்கொள்ளல், அருந்துதல் ஆகியன அனுமதிக்கப்படும், நடனமாடுதம் அனுமதிக்கப்படும், ஆள்-அடர்த்திக் கட்டுப்பாடுகள் இப்போதும் இருக்கும்<br>> ஆள் எண்ணிக்கைக் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லாமல் இறுதிச் சடங்குகள் அனுமதிக்கப்படும் மற்றும் நின்ற நிலையில் உணவுட்கொள்ளல், அருந்துதல் ஆகியன அனுமதிக்கப்படும் ஆள்-அடர்த்திக் கட்டுப்பாடுகள் இப்போதும் இருக்கும்<br>> உற்புறங்களில் ஆடல் பாடல் அனைவருக்கும் அனுமதிக்கப்படும்<br>> அனைவருக்கும் வழிபாட்டுத் தலங்கள் மீண்டும் திறக்கும். ஆனால், ஆள்-அடர்த்திக் கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் இருக்கும் |



மிகச் சமீபத்தியத் தகவல்களுக்கு **nsw.gov.au** எனும் வலைத்தலத்திற்குச் செல்லுங்கள்